3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் கூப்பிடுகிறேன். உங்களைக் கண்டிப்பாகக் கூப்பிடுகிறேன். உட்காருங்கள். இதன் தொடர்ச்சியாக நன்றி சொல்லிவிடட்டும். இதன் தொடர்ச்சியாக நன்றி சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் கூப்பிடுகிறேன், நீங்கள் உட்காருங்கள். நன்றி சொல்லி முடிக்கட்டும். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முக்கியமான அறிவிப்பு இது. அதற்கு நன்றி சொல்லட்டும். நான் உங்களை அனுமதிக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இரண்டு நிமிடம் நீங்கள் உட்காருங்கள். இன்றைக்குப் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிறார்கள். நன்றி சொல்லி முடிக்கட்டும். நான் உங்களைக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) நேற்று கூப்பிட்டேன் அல்லவா? அதேபோன்று இன்றும் கூப்பிடுகிறேன், உட்காருங்கள். நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் அனுமதி தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி தருகிறேன், உட்காருங்கள்.*

(குறுக்கீடுகள்) இப்படி என்னை வற்புறுத்த முடியாது. எதை எதை priority-*ஆக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது தலைவருடைய உரிமை. (குறுக்கீடுகள்) முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருப்பது துரதிருஷ்டவசமானது. அதற்காக என்னுடைய வருத்தத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. சுற்றுச்சூழல் பாதுகாப்பினை செம்மைப்படுத்துதல் மற்றும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி சார்ந்த திட்டங்களை வலுப்படுத்துதல்-முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகத்தின் வாழ்க்கை என்பதே நன்றி என்ற உணர்வின் தொடர்ச்சியாகத்தான் இருக்க முடியும் என்று ஒரு தத்துவவாதி சொன்னார். வாழ்வதும், வளர்வதும், மகிழ்வதும் ஆக ஒவ்வொரு நிலையிலும் மனித சமூகத்தின் உணர்வு என்பதே இதற்கு உதவுகிற, துணை நிற்கிற, அனைத்து சக்திகளுக்கும் நன்றி கடப்பாடு உடைய இயல்புதான் மனித வாழ்க்கையாக இருக்க முடியும்.*

முற்பகல் 11-15

இன்றைக்கு போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளிய மக்களுக்காக உயர் கல்வியிலே இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கோடி தமிழ் மாநிலத்திலே ஒரு கல்விப் புரட்சியைச் செய்து, இந்த ஆண்டு மட்டும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவர்கள் பொறியியல் கல்வி பெறுகிற வசதியை, வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.